# ஒன்டாரியோ இளைஞர் அப்ரெண்டிஸ்ஷிப் திட்டம்

ஒன்டாரியோ இளைஞர் அப்ரெண்டிஸ்ஷிப் திட்டம் (Ontario Youth Apprenticeship Program - OYAP) என்பது ஒன்டாரியோ செக்கண்டரி பாடசாலைகள் மூலம் வழங்கப்படும், பாடசாலையிலிருந்து வேலைக்கு மாற்றப்படும் ஒரு திட்டம். 11 ம் 12 ம் வகுப்புகளில் உள்ள முழுநேர மாணவர்கள் தேர்ச்சிபெற்ற தொழிற்கலைத் துறைகளில் வேலைக்கு அமர்வதன் (வேர்க் ப்லேஸ்மன்ட்) மூலம் கூட்டுப் படிப்புக் கிரெடிட்களை (cooperative education credits) ஈட்டிக்கொள்ளலாம். மாணவர்கள் செகண்டரி பாடசாலையில் இருக்கும் போதே ஓர் அப்ரெண்டிஸ்ஸாக அதாவது வேலைபழகுபவராக சட்டப்படி பதிவு செய்யலாம். இது அவர்களை 12 வது வகுப்பை முடிக்கும்போது ஒன்டாரியோ செக்கண்டரி பாடசாலையின் பட்டதாரியாகவும் அதேவேளை அப்ரெண்டிஸ்ஷிப்பின் (வேலை பழகும் நிலை) ஒரு பகுதியை ஏற்கனவே முடித்தவராகவும் ஆக்கும்.

**யார் பங்குகொள்ள முடியும்?**

நீங்கள் 11வது வகுப்புக்குள் பிரவேசிக்கும் ஒரு முழுநேர மாணவனாகவும் குறைந்தபட்சம் 16 வயதுடையவராகவும் இருந்தால் ஒன்டாரியோ இளைஞர் அப்ரெண்டிஸ்ஷிப் திட்டத்தில் பங்குகொண்டு தேர்ச்சிபெற்ற தொழிற்கலைத் துறைகளில் (skilled trades) தொழில் வாய்ப்பைப்பெற நடவடிக்கை எடுக்கலாம்.

**ஒன்டாரியோ இளைஞர் அப்ரெண்டிஸ்ஷிப் திட்டத்தை நான் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?**

இந்த திட்டத்தைப் பற்றி அதிகத்தைக் கற்றுக்கொள்ள உங்கள் உள்ளூர் ஹைஸ்கூல் வழிநடத்தும் ஆலோசகர், உங்கள் கூட்டுறவுக் கல்வி ஆசிரியர் அல்லது ஒன்டாரியோ இளைஞர் அப்ரெண்டிஸ்ஷிப் திட்டத்தை கிரமப்படுத்துபவருடன் (coordinator) தொடர்புகொள்ளுங்கள்.

**மேலதிக தகவல்களுக்கு:**

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X